தலைப்பு 016 – பாராளுமன்றம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 016 – பாராளுமன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பாராளுமன்றத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்

கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பொருத்தமான வகையில்) சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	**செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை**	**இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு**
1.6.1(அ)	பாராளுமனற்தத்திற்குச் சொந்தமான ஜயந்திபுரவில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	3.3

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் நி.பி 66 மூலம் வருடாந்த நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத 02 செலவின விடயங்களுக்கும் வேறு 14 செலவின விடயங்களுக்கும் பாதீட்டு நிதி ஏற்பாடு 06 சதவீதம் முதல் 240 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிக்கப்பட்டிருந்த துடன் மேலும் 06 செலவின விடயங்களுக்கு 06 சதவீதம் முதல் 29 சதவீதம் வரையான வீச்சில் குறைக்கப்பட்டும் இருந்தால் மதிப்பீடு தயாரிக்கும் போது நி.பி 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படபவில்லை என்பதாக.	மீளாய்வாண்டில் நி.பி 66 மூலம் மாற்றப்பட்டிருந்த ரூபா 30,700,000 மற்றும் ரூபா 4,500,000 ஆக வெளிநாட்டு மானியங்கள் மற்றும் நன்கொடைகளாக இலங்கை பாராளுமன்றத்திற்கு கிடைத்த சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு பயன் படுத்தப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாடு பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு தேவையான நிதியை ஏற்பாடு சேமிப்பு உருவாகும் செலவினை விடயங்களை இனம் கண்டு அந்நிதி ஏற்பாட்டை நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	இணங்காத வகையில் மீளாய்வாண்டில் 30 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 827,600,000 ஆன தேறிய ஏற்பாடுகளில் இருந்து ரூபா 504,116,680 அதாவது 16 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை மற்றும் மேலும் 6 மூலதனச் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 402,100,000 ஆன தேறிய நிதி ஏற்பாடுகளில் இருந்து ரூபா 644,104,350 அதாவது 39 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான கருத்தில் கொள்ளக்கூடிய அளவொன்று சேமிக்கப்பட்டிருந்தது.	09 ஆவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால் எதிர் பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினம் ஏற்படாமை, பாரிய அளவில் திருத்த நடவடிக்கைகள் இடம்பெறாமை மற்றும் செலவின கட்டுப்பாடு காரணமாக உள்ளவரான செலவின அளவு குறை வடைந்தமை போன்ற காரணங்களால் இந்த மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாகவும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பாரிய அளவிலான திருத்த வேலைகள் உருவாகமை, புனரமைப்ப மற்றும் மேம்படுத்தல் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்ய முடியாமல் போனமை மற்றும் மூலதன	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

		சொத்துக்கள் கையேற்றல் எதிர்பார்க்கப்பட்ட போதும் தாமதமானமை போன்ற காரணங்களால் மூலதன செலவின விடயங்களின் கீழ் நிதி ஏற்பாடு சேமிக்கப் பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	
(இ)	மீளாய்வாண்டில் நி.பி 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்த மொத்தம் 65,590,000 ஆன நிதி ஏற்பாடுகளில் மொத்தம் ரூபா 9,186,273 அதாவது 4 சதவீதம் முதல் 71 சதவீதத்திற்கு இடையில் 4 சேமிக்கப்பட்டு இருந்தன.	09 வது பாராளுமன்றம் கலைக்கப்பட்ட காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் இடம்பெறாமல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடைபெறாமை காரணமாக நி.பி மூலம் மாற்றப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	2024 ஜனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் அத்தியவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் நி.பி 66 மூலம் நிதி ஏற்பாடு மாற்றுவதற்காக கருத்தில் கொள்ளப்படுவதுடன் அதற்கான அனைத்து விண்ணப்பங்களும் உரிய நிதியாண்டின் நவம்பர் மாதம் 30 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாராளுமன்றத்தின் மொத்த செலவின விடயம் மாற்றலான ரூபா 130,087,000 தொகையில் ரூபா 46,797,000 அதாவது 36 சதவீதம் நவம்பர் மாதம் 30 ஆந் திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் அதில் 2025 ஜனவரி மாதத்தில் மாற்றல்கள் ரூபா 17,797,000 ஆன அளவொன்றாக இருந்தது.	கணக்குகளை தீர்வு செய்தல் காலஎல்லை 2025 ஜனவரி 02 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டமையால் 9 ஆவது பாராளுமன்றத்தை கலைத்தல் மற்றும் 10 ஆவது பாராளுமன்றத்தின் ஆரம்பம் 2024 செப்டம்பர் மற்றும் நவம்பர் காலப்பகுதியில் இடம் பெற்றமையால் 2024 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு செலவின விடயங்களில் பற்றாக்குறை மற்றும் சேமிப்புகள் என்பவற்றை சரியாக எதிர்கூறுவது சிரமமாக இருந்ததால் இந்நிலைமையில் 2024 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் நி.பி 66 இன் கீழ் நிதிஏற்பாடு கணக்கீடு செய்தல் சாத்தியமற்றதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைசேரிக்கு அறிக்கையிடாத எந்த ஒரு கடப்பாடும் அல்லது பொறுப்பொன்று முன்னைய ஆண்டின் செலவினமாக அடுத்த ஆண்டின் போது தீர்வு செய்ய முடியாத போதும் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக் கூற்றில் உள்ளடக்கப்படாத மீளாய்வாண்டிற்குரிய ரூபா 15,687,145 கூட்டுத்தொகையான செலவினம் 2025 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 31 ஆந் திகதி பின்னர் கிடைத்த நீர் மின்சார மற்றும் தொலைபேசி பட்டியல்களின் பட்டியல் திகதி திசெம்பர் 31 ஆந் திகதிய பிந்திய தினம் ஒன்றாக இருப்பதால் பொறுப்புக் கூற்றில் அப்பட்டியலை பொறுப்பாக உள்ளடக்கு வதற்கு முடியாத எனவும் ஒழுக்காற்று ரூபா 225,000 ஆன பரிசோதனை கட்டணப் பட்டியலும் 2024 ஆம் ஆண்டில் நான்காவது காலாண்டுக்குரிய முத்திரை வரிப் பட்டியல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் கிடைத்ததால் பொறுப்பாக கருத்திக் கொள்ளப்படவில்லை என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புகளும் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.2 ஆம் பந்தியின் ரூபா 7,820,000 ஆன கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுகளில் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.2 ஆம் பந்தியின் பிரகாரம் 14 ஆம் வழிகாட்டியின் படி வருடாந்த	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயலாற்றல் மதிப்பீட்டு நடைமுறை பிரதான உள்ள கணக்காய்வாளரால்	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	செயலாற்றல் அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் மூலம் நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மீதான அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மீதான அடிப்படையில் நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டி சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	மேற்கொள்ளப்பட்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கைக்கு உள்ளடக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது	
(ஆ)	வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் 6.2 ஆம் அத்தியாத்தின் மூலம் நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தின் கீழ் ஊழியர் பயிற்றுவித்தல் தொடர்பான குறிப்பிட்ட படிவத்தில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை.	அடுத்த ஆண்டுக்காக செயலாற்ற அறிக்கை தயாரிக்கும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக்	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 04 ஆம் வழிகாட்டியின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களாலும் வருடாந்த பெறுகை திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் அதன் பிரதியொன்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் பெறுகை திட்டம் 03 மாத கால தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அது	2024 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் முறையே மேற்கொள்ள வேண்டிய போதிலும் உரிய காலஎல்லைக்கு இணங்க மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	கணக்கீட்டுஉத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	மீளாய்வாண்டின் பெறுகை திட்டத்தில் வேலைகளுக்காக (civil works) ரூபா 264,825,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதியில் அதன் செயன் முன்னேற்றம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக திட்டத்தின் செயற்திறனை மதிப்பீட்டுக்கு உட்படுத்த முடியாமல் இருந்தது.	பெறுகை திட்டத்தில் திட்டமிடப்பட்ட வேலைகள் மேறகொள்ளப்படாமல் இருந்தத்துடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 264,825,000 தொகையில் ரூபா 63,846,857 வேலை களுக்காக பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் செயன் முன்னேற்றம் 2024 ஆம் ஆண்டிற்காக திருத்திய செயலாற்றல் அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	ஆண்டிற்குரிய செயன் முன்னேற்ற அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தியின் 06 ஆம் உப இலக்கத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்குரிய பொருள் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	2024 ஆம் ஆண்டுக்காக பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டுள்ள துடன் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாக குறிப்பிடப்பட்டிருந்தது	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2017 மே 04 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டு இருந்த 02/2017 ஆம் இலக்க ஒன்றிணைந்த சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய தேசிய நூலகங்கள் மற்றும் நூலக ஆவணக் காப்பக சபையின் 2004/நூ/2016–(திருத்த) சுற்றறிக்கையின் 3.1 ஆம்	பொருள் கணிப்பீடு ஆண்டுதோறும் ஏனைய பிரிவுகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற போதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காக காணப்படுகின்ற நூலகத்தின் புத்தகங்களின் கணிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளுதல் கடந்த ஆண்டு தாமதமாக இருந்த	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பந்தியின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்ற பாராளுமன்றத்தின் புத்தகங்களுக்காக வருடாந்த கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கவில்லை.	போதும் 2023 ஆம் ஆண்டுக்கான அறிக்கை மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட குடியேற்ற முறைமை மூலம் வருடாந்தம் மேற்கொண்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக

4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மரணித்த, ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 2,177,604 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 3 இற்கும் இடைப்பட்ட அறவிடப்கட வேண்டிய கடன் மீதி ரூபா 850,744 ஆக இருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 398,701 ஆக இருந்தது.	மரணித்த ஒரு உத்தியோக த்தரிடமிருந்து ரூபா 6,064 ஆன கடன் மீதி இதுவரை அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 398,701 ஆன கடன் மீதி வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வழக்கு முடிவடையாததாலும் அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ரூபா 850,744 ஆன கடன் மீதிகளில் ரூபா 197,342 தொகை பிணையாளர்களி டமிருந்து அறவிடப்பட்டு வருவதுடன் 2025.05.25 ஆந் திகதி வரையிலும் அக்கடன் மீதியில் நிலுவை தொகை ரூபா 176,373 வரை குறைவடைந்து இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.	அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். .
(ஆ)	பாராளுமன்றத்தில் 03 வரவேற்பு பதவிகளை ஏற்படுத்துதல், மற்றும் உத்தேச சம்பள நடைமுறையொன்றிற்காக 2016 ஜனவரி 28 ஆந் திகதிய 16/0190/702/006 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தினால் தேசிய சம்பள ஆணைக்குழுவின்	பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வரவேற்பு உத்தியோகத்தர் பதவிகள் உட்பட பாராளுமன்ற பொதுச் செயலாளரின் பதவியணியின் ஏனைய பதவிகளுக்கும் பொருந்தும் பிரகாரம் மீள கட்டமைப்பு செய்தல்	உரிய பிரகாரம் தேசிய சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

	பரிந்துரை பெற்றுக் கொள்வது பொருத்தம் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இதுவரை வெளித்தர உத்தியோகத்த குழு ஒன்றுடன் கூடிய குழுவொன்றின் மூலம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்வறிக்கை சபாநாயகருக்கு கிடைத்த பின்னர் அதனை பாராளுமன்ற பதவியணி மதியுரை செயற்குழுவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	
(இ)	மாதிவல பாராளுமன்ற உறுப்பினர் வீடுகளை வழங்கும் போது பாராளுமன்ற பொதுச் செயலாளருடன் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற உடன்படிக்கையின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி களுக்காக அனைத்து கட்டணங்களும் குடியிருப்போர் களால் தொடர்ந்து உரிய கால நேரத்தில் செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாராளுமன்ற உறுப்பினர் களிடமிருந்து மின்சாரம் நீர் மற்றும் தொலைபேசி பட்டியல் களுக்காக முறையே ரூபா 637,539 ரூபா 590,860 மற்றும் ரூபா 303,630 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை	84 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் ரூபா 637,539 ஆன தொகையும் 86 முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து ரூபா 590,860 ஆன நீர் கட்டணங்களும் 83 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து ரூபா 303,630 ஆன தொலைபேசி பட்டியலையும் வீட்டு வைப்பு தொகையில் இருந்து முழுமையாக கழிப்பதற்கும் பின்னர் ஏதேனும் மீதிகள் இருந்தால் அதனை உரிய உறுப்பினர்களுக்கு விடிவிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	உடன்படிக்கை பிரகாரம் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 ஜனவரி 10 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 01/2024 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் சிக்கனமாக அரசின் செலவினம் மேற்கொண்டு செலவினத்தை குறைப்பதற்கான பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் கடுமையாக பின்பற்றி அந்தந்த நிறுவனங்களின் தன்மையின் பிரகாரம் பொருத்தமான வகையில் செலவினக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின்	கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு சரியாக இருந்த போதும் மாற்று வழியாக பாராளுமன்றத்தில் சீருடையில் இருப்பதற்கு இடம் ஒன்றை ஒதுக்குதல் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகள் சிரமமாக இருப்பதால் கடமை நேரத்தில் ஒரு பகுதியாக ஆக்குவதற்கு நேர்வதால் அது நடைமுறை மற்றும் கிரய செயற்திறன் அற்றது அல்ல என	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பெண் உத்தியோகத்தர்களின் அலுவலக சாரிகளை சுத்திகரிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 171,557 தொகை செலவிடப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்டிருந்தது.	
(உ)	2020, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பொழிப்பறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி 01/2018 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி மற்றும் வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய TIP/SS/01/84 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பாராளுமன்ற பதவியணியினருக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் ஆலோசனைகளுக்கு புறம்பாக ‘‘சிரேஷ்ட மட்டம்’’ இற்குரிய நிறைவேற்றுனர் பதவியொன்றில் ஆறு (06) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாதிருந்த 03 பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு (அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துடைய தொடர்ச்சியான சேவைக் காலம் 02 மாதங்களுக்கும் 01 வருடத்திற்கும் இடைப்பட்ட) சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கியமை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	நீண்டகாலமாக அனுபவித்து கொண்டிருந்த வாகன அனுமதிப்பத்திர வரப்பிரசாதம் இல்லாமல் போனமை தொடர்பாக மீண்டும் வெளிவாரி உத்தியோகத்தர்களுடன் கூடிய நிபுணர் குழுவொன்று கௌரவ சபாநாயகரின் ஈடுபாட்டுடன் நியமிக்கப்பட்டு தற்போது உரிய அறிக்கை தயாரிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அந்த அறிக்கையில் வழங்கப்பட்ட நடைமுறைக்கு முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்து உள்ளவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பாராளுமன்றத்தின் மொத்த பதவியணியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 994 ஆக இருந்ததுடன் உள்ளவரான பதவியணி எண்ணிக்கை 844 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் நிறுவனத்தின் சிரேஷ்ட மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் 210 வெற்றிடங்கள் காணப்பட்டன மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அல்லாத 13 ஊழியர்கள் அமைய, தற்காலிக மற்றும் வேறு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் செயலாற்றலுக்காக தாக்கமளிக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.